2026 மார்ச் மாதம் 12– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12– ஆம் தேதி வியாழக்கிழமை

திரு.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW9 – ராமலட்சுமி |
| தகப்பனார் பெயர்: | சீனிராஜ் |
| ஊர்: | பழனிசெட்டிபட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | காவல் ஆய்வாளர், சைபர் குற்றப்பிரிவு, திண்டுக்கல் |
| வயது : | 51 |

12.03.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், சைபர் கிரைம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். தற்போது எடுப்பு அலுவலாக திண்டுக்கல் மாவட்ட தேர்தல் பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 30.11.2024 ம் தேதி தேனி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கூடுதல் பொறுப்பாக பழனிசெட்டிபட்டி காவல்நிலைய பொறுப்பை கவனித்து வந்தபோது, அன்றைய தினம் சார்பு

ஆய்வாளர் திரு.மணிமாறன் அவர்களால் பதிவு செய்துக் கொடுக்கப்பட்ட பழனிசெட்டிபட்டி காவல்நிலைய குற்ற எண்.477/2024 பிரிவுகள் 296 பி, 118(1), 125, 109(1), 351(3), 118(2) BNS and Section 4 of TNPHW Act –ன்படியான வழக்கை அன்றைய தினமே 11.20 மணிக்கு எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடமான சடையால்பட்டி, எஸ்.வாடிப்பட்டி, கட்டப்பொம்மன் தெரு, எதிரி ஜெயபால் வீட்டின் அருகில் உள்ள சம்பவ இடத்தை 11.30 மணிக்கு சாட்சிகள் தங்கவேல், வீரய்யா ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, மேற்சொன்ன சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்தது தான். அது **அ.சா.ஆ.7** மற்றும் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அதன்பின் சம்பவ இடத்தில் இருந்து இரத்தம்படிந்த மண் மற்றும் இரத்தம்படியாத மண் இரண்டையும் பார்வை மகஜர் சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி நான் தயார் செய்தது தான். அது **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் அத்தாட்சி சாட்சிகள் தங்கவேல் மற்றும் வீரய்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்தாட்சியில் சாட்சிகள் இருவர்களிடமும் கையொப்பம் பெற்றேன். அதன்பின்னர் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கார்த்திக்கேயன், பொம்மையசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. அதன்பின்னர் தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையிலிருந்த வாதி வசந்தா மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த வாதியின் மகள்வழி பேரன் கோபிநாத் மற்றும் புகார் எழுதிக்கொடுத்து, சாட்சி கையொப்பம் செய்த வாதியின் மகள் நாகலட்சுமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் 14.30 மணிக்கு வாதியின் கணவர் பாண்டி சம்பவத்தின்போது அணிந்திருந்த

இரத்தக்கறைப்படிந்த மருத்துவமனையில் சிகிச்சையின்போது வெட்டி எடுக்கப்பட்ட வெள்ளை நிற பனியன் ஒன்றை வாதி ஆஜர் செய்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன்.

4. அதன்பின்னர் 15.30 மணிக்கு எதிரி ஜெயபால் என்பவரை எதிரி வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தில் வைத்து 15.30 மணிக்கு கைது செய்து, கைது பற்றி எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தேன். அதன்பின்னர் அதே இடத்தில் வைத்து 15.45 மணிக்கு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராமராஜ் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் மடிக்கணினியில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தினை நகல் எடுத்து எதிரியிடம் படித்துக் காண்பித்து எதிரி மற்றும் சாட்சிகள் இருவர்களிடம் கையொப்பம் பெற்றேன்.

5. அதன்பின்னர் 16.45 மணிக்கு எதிரி அவரது வீட்டின் முன்பு இருந்த வாழை மரங்களுக்கு அடியில் இருந்து எடுத்து ஆஜர் செய்த மொத்தம் நீளம் சுமார் 24 செ.மீ. அளவுள்ள பூண்போட்ட மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்றை ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் ராமராஜ் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்பு அத்தாட்சியில் சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி நான் தயார் செய்தது தான். அது **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் நான் தயார் செய்தது தான். அதிலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் படிவம் 91 (எண்ணம் 3) நான் தயார் செய்தது தான். அவைகள் முறையே **அ.சா.ஆ.12, அ.சா.ஆ.13, அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கத்தி, இரத்தம்படிந்த வெள்ளைநிற பனியன் இரத்தம்படிந்த மண் மற்றும் இரத்தம்படியாத மண் ஏற்கனவே சா.பொ.1 முதல் சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் ஒப்புதல் மற்றும் அத்தாட்சி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. அதன்பின்னர் 17.45 மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துடன் காவல்நிலையம் வந்து, எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 01.12.2024 ம் தேதி இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.மணிமாறன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் காயம்பட்ட சாட்சி பாண்டி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்குக் கோப்பை பழனிசெட்டிபட்டி காவல் ஆய்வாளர் திரு.சிவராமக்கிருஷ்ணனிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

8. புகாரை யார் எழுதியதாக எனது விசாரணையில் தெரிந்துக் கொண்டேன் என்றால் வாதியின் மகள் நாகலட்சுமி எழுதியதாக தெரிந்துக் கொண்டேன். புகார் கொடுக்கும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்று எனது விசாரணையில் தெரிந்துக் கொண்டேனா என்றால் வாதி, வாதியின் மகள், அவரது பேரன் ஆகியோர்கள் இருந்ததாக தெரிந்துக் கொண்டேன். புகாரில் 3 வது பக்கத்தில் மகாலட்சுமி என்ற பெயரில் நாகலட்சுமி என்று திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் இல்லை. புகாரில் வாதியின் கணவர் மயக்க நிலையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. நான் தயார் செய்த பார்வை மகஜரில் எதிரி ஜெயபாலின் வீட்டிற்கு அருகில் பாண்டி என்பவரின் வீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் எதிரி அடிக்கடி வாதியிடம் பிரச்சனை செய்து வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும் வாதி குடும்பத்திற்கும் புகை மூட்டல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததை எனது விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அந்த பிரச்சனையில் எதிரி வாதியின் கைப்பேசியை சரிசெய்து கொடுப்பதாக முடிவு எட்டப்பட்டிருந்த விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

10. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளும், கத்தி கைப்பற்றியப்போது இருந்த அத்தாட்சி சாட்சிகளும் ஒரே நபர்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தப்போது கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. சம்பவத்திற்கு முன்பு வாதி இருதய நோய் சம்பந்தமாக ஆஞ்சியோபிளாஸ்ட் செய்திருந்த விபரத்தை எனது விசாரணையில் தெரிந்துக் கொண்டேனா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் ஆம்புலன்ஸில் யார் யார் உடன் சென்றிருந்தார்கள் என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்துக் கொண்டேனா என்றால் கணவன் மற்றும் மனைவி இருவரும் சென்றார்கள்.

11. கோபிநாத் ஆம்புலன்ஸில் சென்றாரா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்காமல் ஏற்கனவே எதிரி மீது வாதிக்கு இருந்த முன்விரோதத்தின் காரணமாக அவர் கொடுத்த பொய் புகாரை நான் விசாரணை செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி ஜெயபாலின் வீட்டில் அருகில் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ இடத்திலிருந்து சான்று பொருட்களை அத்தாட்சியின் மூலம் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.03.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.12 17:43:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.03.2026